செய்தி வெளியீடு எண்: 794 நாள்: 14.11.2019

## கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டயப் படிப்பு (2020 – 2021)

சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2020–2021ஆம் ஆண்டுக்கான ஓராண்டு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல், அகழாய்வுக்கான பட்டய வகுப்புகள் 2020 சனவரித் திங்கள் முதல் தொடங்கப்பட உள்ளது. இவ்வகுப்பில் கல்வெட்டியல், தொல்லியல், தமிழக வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம் குறித்து அறிந்து கொள்வதற்கும், கல்வெட்டுப் படியெடுத்தல் மற்றும் ஆவணப்படுத்தலுக்கான பயிற்சியும் அளிக்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பட்டயப் படிப்பு சனி மற்றும் ஞாயிறு ஆகிய விடுமுறை தினங்களில் ஓராண்டு காலம் நடைபெறும்.

இப்பட்டய படிப்புக்கான விண்ணப்பத்தினை நிறுவன வலைத்தளத்தில் (www.ulakaththamizh.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இப்பயிற்சிக்கான கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இப்பயிற்சிக்கான சேர்க்கைக் கட்டணம் ரூ.2500 ஆகும். வயதுவரம்பு கிடையாது. நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 2019 திசம்பர் 20ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி வரை ஆகும். வகுப்புகள் 2020 சனவரி திங்கள் முதல் தொடங்கப்பெறும்.

மேலும் தகவலுக்கு தொலைபேசி – 044–22542992, 9500012272 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9